**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 89 /2022 PW .1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வினோத் குமார் | தந்தை/கணவர் பெயர்: கருப்பையா | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.02.2026

---

**(2ம் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. 1ம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**11.02.2026 முதல் விசாரணை:**

**1.** நான் கீழவளவில் குடியிருக்கிறேன். நான் கம்பி கட்டும் வேலை செய்கிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 5 வருடத்திற்குமுன்பு சிங்கம்புணரியில் என்னுடைய உறவினர் என் மாமாவின் அம்மா இறந்த நிகழ்விக்கு நான் மாயணத்தில் இறுதி நிகழ்ச்சியில் இருந்த போது 1ம் எதிரி எனது அப்பா சாட்சி கருப்பையாவை தவறாக பேசினார். நான் ஏன் இவ்வாறு பேசிகிறாய் என்று 1ம் எதிரியிடம் கேட்டதற்கு என்னை 2 எதிரிகளும் சேர்ந்து, அடித்து, குத்தி கீழே தள்ளிவிட்டு எனக்கு நெற்றியிலும், மூக்கிற்கு மேலும் காயம் ஏற்படுத்தினார். எனக்கு அடித்தப்பட்டவுடன் அங்கு இருந்தவர்கள் விலக்கி விட்டார்கள். அதன் பிறகு நான் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன். அதன் பின்னர் நான் சிகிச்சை முடித்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த புகார் மனு ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.த.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 3 நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

2. சம்பவ இடத்திலிருந்து போலீசாருக்கு தகவல் சொல்லிவிட்டேன். பின்னர் போலீசார் அங்கு வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரி காளிதாஸ்க்கு காயம்

என்றால் இல்லை. எதிரிகளை இதற்கு முன்னர் நான் பார்த்தது இல்லை . எதிரிகள் எனது உறவினர் என்றால் தெரியாது . சம்பவமே நடக்கவில்லை என்றாலும் , உறவு முறையில் ஏற்பட்ட பிரச்சனையில் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் பெயர் போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். புகார் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்தேன் . எனக்கு புகார் எழுத தெரியாததால் போலீசாரிடம் கேட்டு எழுதினேன்.